## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1)** தகவல் தொழில்நுட்பச்சட்டம் **2000** ஆண்டில் எந்தப் பிரிவு பொதுமக்கள் கைது செய்வதை தவிர்ப்பதற்காக நீக்கப்பட்டது?

**A]** பிரிவு **68 A**

**B]** பிரிவு **65 A**

**C]** பிரிவு **66 A**

**D]** பிரிவு **64 A**

- ✓ சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவிப்பதற்காக கைது செய்வதற்கு உச்சநீதிமன்றம் அதிரடியாக **2015**ஆம் ஆண்டில் தடை விதித்துள்ளது.
- ✓ அத்துடன் இத்தகைய கைது நடவடிக்கைக்கு பயன்படுத்துகிற தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் **66**-ஏ பிரிவு செல்லாது என்றும் உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பை அளித்தது.
- ✓ இந்தத் தீர்ப்பை அனைத்து மாநில அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு உச்ச நீதிமன்றம் சமீபத்தில் அறிவித்துள்ளது.
- ✓ மேலும் உச்ச நீதிமன்றமானது இந்த தீர்ப்பின் நகலை அனைத்து நீதிமன்றங்களுக்கும் அனுப்பி காவல் துறையினருக்கும் மக்களுக்கும் இந்த சட்டத்தினை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவித்துள்ளது.

**2)** தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த 'நெல்சன் மண்டேலா ஸ்கூல் ஆப் பப்ளிக் கவர்னன்ஸ்' என்ற நிறுவனத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய வம்சாவழியைச் சேர்ந்த பேராசிரியர் யார்?

**A]** பாலா.வி. பாலச்சந்திரன்

**B]** பைசல் இஸ்மாயில்

**C]** நித்தின் நொஹ்ரியா

**D]** அசோக் ஜுன்ஜுன்வாலா

- ✓ இந்திய வம்சாவழியை சேர்ந்த பேராசிரியர் பைசல் இஸ்மாயில் என்பவர் புகழ்பெற்ற தென் ஆப்பிரிக்காவின் கல்வி நிறுவனத்திற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ✓ இவர் கேப்டவுன் பல்கலைக்கழக நெல்சன் மண்டேலா ஸ்கூல் ஆப் பப்ளிக் கவர்னன்ஸ் நிறுவனத்தின் தலைவர் பதவியை பேராசிரியர் ஆலன் என்பவரிடம் இருந்து ஜூலை **2019** ஆம் தேதி பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்.
- ✓ உலகளாவிய பேச்சுவார்த்தை யாளரான இவர் தென்னாப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன்களுக்கு இடையே நடைபெற்ற வணிக மற்றும் மேம்பாட்டு ஒப்பந்தங்களை கையெழுத்திட பேச்சுவார்த்தையாளராக செயல்பட்டுள்ளார்.
- ✓ இவர் சர்வதேச வர்த்தக மற்றும் நிர்வாக கழகத்தின் தலைவராக **2015** முதல் **2018** ஆம் ஆண்டு வரை செயல்பட்டுள்ளார்.
- ✓ மேலும் இதே பணியில் அவரது பதவி **2023** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ✓ **ucd school of economics** நிறுவனத்தின் பேராசிரியராக பணியாற்றிய இவர் உலக வர்த்தகக் கழகத்தின் தூதுவராகவும் வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்தின் மூத்த ஆலோசகராகவும் செயல்பட்டுள்ளார்.

**3)** தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை சரிப்படுத்துவதற்கான வழிமுறைகளை தீர்மானித்தல் குழுவின் தலைவர் யார்?

**A]** அனுப் ஷட்பதி

**B]** அனின்தியா சிங்

**C]** பிஸ்நுப்பிரியா

**D]** குன்வந் ஷா

- ✓ அனுப் ஷட்பதி தலைமையிலான நிபுணர் குழு சமீபத்தில் 'தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை சரிப்படுத்துவதற்கான வழி முறைகளை தீர்மானித்தல்' என்ற தலைப்பின் கீழ் தங்களது அறிக்கையை இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது.
- ✓ இந்த அறிக்கையில் ஜூலை **2018** ன் படி இந்தியாவில் வாழ்வதற்கு குறைந்தபட்ச ஊதியமாக ஒருநாளைக்கு **375** ரூபாய் அவசியமாகிறது.
- ✓ மேலும் இந்த அறிக்கையின்படி நகர்ப்புறத்தில் வாழ்வதற்கான படியாக ஒரு நாளைக்கு **55** ரூபாயும் ஒரு மாதத்திற்கு **1430** ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- ✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின் விதிமுறைகளின் படி நாடு தழுவிய சமச்சீர் உணவாக தினப்படி **2400** கலோரிகளையும் இதனுடன் **50** கிராம் புரதச் சத்து மற்றும் **30** கிராம் கொழுப்புச்சத்து நிறைந்ததையே சமச்சீர் உணவாக கருதப்படுகிறது.

**4) கீழ்க்காணும் எந்த நகராட்சி நிர்வாகம் 2019 ஆம் ஆண்டுக்கான 'ஸ்வச்தா' விருதை பெற்றது?**

**A]** ராய்கர்

**B]** அம்பிகாபூர்

**C]** கும்பகோணம்

**D]** கிரேட்டர் ஹைதராபாத்

- ✓ **2019** ஆம் ஆண்டுக்கான ஸ்வச்தா விருதை சத்தீஸ்கரைச் சேர்ந்த ராய்கர் நகராட்சி நிர்வாகம் பெற்றது.
- ✓ அம்பிகாபூர் மற்றும் கும்பகோணம் நகராட்சி முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசை பெற்றது.
- ✓ மேலும் ஜாஸ்ப்பூர் நகர், மல்லபுரம் நகராட்சி, சூரஜ்பூர் நகர்பாலிகா பரிஷத் சிறந்த நகர்ப்புறங்களுக்கான பரிசை வென்றது.
- ✓ மேலும் 'மில்லியன் பிளஸ் நகரம்' என்ற விருதை 'கிரேட்டர் ஹைதராபாத்' நகராட்சி கழகம் வென்றுள்ளது.முன்னேறும் மாவட்டங்கள் பட்டியலில்
- ✓ ஆறுதல் பரிசாக சாஸ் நகராட்சி கழகம் வென்றுள்ளது.

**5) ஜிபிஎஸ் உதவியின்றி எறும்பை போன்று நடக்கும் ரோபோட்டை முதல் முதலாக எந்த நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்தனர்?**

**A]** பிரான்ஸ்

**B]** ஜெர்மனி

**C]** இங்கிலாந்து

**D]** ஜப்பான்

- ✓ பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **French National centre for scientific research** விஞ்ஞானிகள் **AntBot** எனப்படும் **gps** உதவியின்றி எறும்பைப் போன்று நடக்கும் ரோபோட்டை வடிவமைத்து உள்ளனர். பாலைவன எறும்புகளை முதன்மையாகக் கொண்டு இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ பொதுவாக எறும்புகள் புற ஊதா கதிர்கள் மற்றும் துருவ ஒளிகளை பயன்படுத்தி தங்களது பாதையை தெரிவு செய்யும். பாலைவன எறும்புகள் இந்த வெளிச்சத்தைக் கொண்டு நூறு மீட்டர்கள் வரையிலும் தடையில்லாமல் பாலைவனத்தில் உணவைத் தேடி செல்கின்றன. மீண்டும் வழி மாறாமல் தன் கூட்டிற்குத் திரும்பி வந்துவிடும். இதை முதன்மையாகக் கொண்டே இந்த ஆறு கால்களை உடைய **AntBot** யை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.ஆப்டிகல் திசைகாட்டி யை பயன்படுத்தி தங்களது வழியைத் தெரிவு செய்கின்றன.

**6) Early Ed Asia 2019 எங்கே நடைபெற்றது?**

A] ஜெய்ப்பூர்

B] புது டெல்லி

C] ஹைதராபாத்

D] ராய்ப்பூர்

- ✓ ஆசியாவின் மிகப்பெரிய மாநாடு **Early Ed Asia 2019** ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்ப்பூரில் நடந்தது.
- ✓ "நமது குழந்தைகள், நமது எதிர்காலம்" என்பது இதன் கருப்பொருள் ஆகும்.
- ✓ குழந்தை பராமரிப்பை கற்றுக்கொண்டு அதை பிறருக்கும் பகிர்ந்தளிக்கும் வண்ணமாக இந்த மாநாடு நடைபெற்றது.
- ✓ இந்த மாநாட்டை **Early Ed Asia 2019** அவர்களின் **childhood** கழகமும் **ScooNews**ம் இணைந்து நடத்தியது.
- ✓ இந்த மாநாட்டில் குழந்தை பராமரிப்பில் நிபுணத்துவம் பெற்ற பல அறிஞர்கள் பங்கு பெற்றனர். **600** க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள், சட்டவரைவாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து பங்கு கொண்டனர். ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் இருந்து இருந்து சிறந்த மேதைகளும் பங்கேற்றனர். இதுவே இந்தியாவில் நடைபெற்ற முதல் குழந்தை பராமரிப்பு மாநாடாகும்.

7) இந்திய விமானப் படையின் முதல் பெண் ப்ளைட் இன்ஜினியர் யார்?

A] ப்ரியா ஷர்மா

B] ஹினா ஜெய்ஸ்வால்

C] மோகனா சிங்

D] பிரதீபா குமாரி

- ✓ பெங்களூரு இந்திய விமானப் படையின் முதல் பிளைட் இன்ஜினியராக சண்டிகரைச் சேர்ந்த **flight lieutenant** ஹினா ஜெய்ஸ்வால் ஆவார்.
- ✓ ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த இந்திய விமானப்படையில் **flight lieutenant** ஹினா அவர்கள் வெற்றிகரமாக எலஹாங்காவில் உள்ள **112**வது ஹெலிகாப்டர் தளத்தில் தன் பயிற்சியை முடித்துள்ளார். அவர் ஹெலிகாப்டர் ஸ்குவாட்ரன் பிரிவில் பணியமர்த்தப்பட உள்ளார்.மேலும் சியாச்சின் பிரதேசத்தில் இருந்து அந்தமான் நிக்கோபார் தீவுகள் வரை உள்ள இந்திய விமானப்படையின் எல்லை பகுதிகளை இவர் கண்காணிப்பார்.

8) 83வது சீனியர் தேசிய பாட்மின்டன் சாம்பியன்ஷிப் 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றவர் யார்?

A] சிராஹ் செட்டி

B] பிரனவ் ஜெர்ரி சோப்ரா

C] லக்ஷிய சென்

D] சவ்ரப் வர்மா

- ✓ யோநெக்ஸ் சன்ரைஸ்- கவுகாத்தியில் நடைபெற்ற **83**வது சீனியர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் சவ்ரப் சர்மா ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை கைப்பற்றினார். இறுதிப் போட்டியில் லக்ஷிய சென் யை **21- 18 ,21** க்கு **13** என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.
- ✓ இது இவருடைய மூன்றாவது பட்டமாகும்.
- ✓ முன்னதாக பிரனவ் ஜெர்ரி சோப்ரா மற்றும் சிராக் செட்டி இணை அர்ஜுன் எம் ஆர் மற்றும் **sloka** ராமச்சந்திரன் இணையை **21- 13, 22** க்கு **20** என்ற செட் கணக்கில் **33** நிமிடங்களில் வீழ்த்தியது.



winmeen.com

**9) National federation of Indian railway men** இந்திய ரயில்வே பணியாளர்களின் தேசிய கூட்டமைப்பின் தலைமை இடம் எங்கே உள்ளது?

**A]** ஹைதராபாத்

**B]** புது டெல்லி

**C]** கொல்கத்தா

**D]** சென்னை

- ✓ இந்திய ரயில்வே பணியாளர்களின் தேசியக்கூட்டமைப்பு புதுடில்லியை தலைமை இடமாகக் கொண்டது.
- ✓ பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜப்பான் நாட்டின் ஷின்ஷோ அபே அவர்களால் அகமதாபாத்தில் செப்டம்பர் **2017** ஆம் தேதி புல்லட் ரயில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது இந்திய ரயில்வே பணியாளர்கள் கூட்டமைப்பு. புல்லட் ரயில்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக இருக்கின்ற ரயில்களில் உள்ள பழுதுகளை நீக்கி ரயில்வே பாதைகளில் உள்ள பிரச்சனைகளை சரி செய்யுமாறு கோரிக்கை விடுத்தது.
- ✓ இந்த புல்லட் ரயில் திட்டம் **2022**ம் ஆண்டிற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ இந்த புல்லட் ரயில் அகமதாபாத் மற்றும் மும்பை இடையே **508** கிலோ மீட்டரை **3** மணி நேரத்தில் கடக்கவிருக்கிறது. இதில் **21** கிலோ மீட்டர் தூரம் கடலுக்கு அடியே உள்ள சுரங்கப்பாதையாகும்.
- ✓ கடலுக்கு அடியில் உள்ள சுரங்கப்பாதை அமைக்க **3500** கோடிகள் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது இந்த மொத்த புல்லட் ரயில் திட்டத்திற்காக **1.08** லட்சம் கோடிகள் செலவாகும் என அறியப்படுகிறது.

**10)** இந்தியாவின் முதல் **Agromet forecast center** எந்த மாநிலத்தில் நிறுவப்பட்டது?

**A]** கர்நாடகா

**B]** ஆந்திரப் பிரதேசம்

**C]** கேரளா

**D]** தெலுங்கானா

- ✓ இந்தியாவின் முதல் அக்ரோ மேட் முன்னறிவிப்பு மையத்தை கர்நாடகத்தில் உள்ள தார்வாட் மாவட்டத்தில் 'வடக்கு கர்நாடக அக்ரோ மேட் முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தில்' உள்ள விவசாயிகள் கழகத்தில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த கழகம் இந்தியாவிலேயே முதல்முறையாக விவசாயிகளுக்கு அறிவியல்பூர்வமாக கை கொடுக்கும் திட்டம் ஆகும். இதன் மூலம் குறிப்பிட்ட இடத்தில் உள்ள கால நிலையை தெரிந்து கொள்ள முடியும். இதனால் குறிப்பிட்ட கால நிலையில் எந்தெந்த பயிர்கள் விளையும் என்று விவசாயிகள் முன்கூட்டியே முடிவெடுத்து அதிகமான லாபத்தை ஈட்ட இயலும்.
- ✓ மேலும் இந்த கழகத்தின் மூலம் இடி மற்றும் மின்னல்களின் முன்னறிவிப்பையும் தெரிந்துகொள்ள முடியும். இதனால் பல கால்நடைகளை அழிவிலிருந்து காக்க முடியும்.
- ✓ இதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள **25** லட்சம் விவசாயிகளுக்கு முன்னறிவிப்புகள் **whatsapp**, குறுஞ்செய்திகள், சமூக வலைதளங்கள் மற்றும் வானொலி நிலையத்தின் மூலம் தகவல்கள் பரிமாறப்படும்.
- ✓ இந்த கழகம் மத்திய புவி அறிவியல் மற்றும் இந்திய வானிலை துறையின் கீழ் நிறுவப்பட்டதாகும்.